Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham — மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ iv

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | ஆடி - 30 | 15-08-2003 | வெள்ளிக்கிழமை | ஓசை 178




# போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் மீது தமிழ்மக்கள் நம்பிக்கையிழந்து வருகின்றனர்

## அ.சா.நி.பிரதிநிதிகள் எரிக்கிடம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கையிழந்து வருவதாக மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நேற்று நோர்வே விசேட தூதுவர் எரிக் சூல்ஹெய்மிடம் எடுத்துக் கூறியுள்ளதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய வட்டாரங்கள் கூறியுள்ளன. கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க கண்காணிப்புக்குழு சரிவரச் செயற்படத் தவறிவிட்டது எனவும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.**

அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத் தலைவர் கமலதாஸ் மேலும் இது குறித்து எடுத்துக் கூறுகையில்; 1990 இல் மீராவோடையிலிருந்து இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் தமது சொந்த இடத்தில் குடியேற சிறிலங்கா இராணுவம் அனுமதி மறுத்து வருகின்றது. இது விடயத்தில் கண்காணிப்புக் குழு தேவையான நடவடிக்கை எடுக்காது மௌனம் சாதித்து வருகின்றது. போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்தக் கிராமங்களில்


(08ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்துப் பிரதமருக்கு கொழும்பில் நேற்று வரவேற்பு

தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் சினவத்ரா தலைமையிலான உயர் மட்டத் தூதுக்குழு நேற்றுக் காலை 10.20 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

இவர்களை ரணில் விக்கிரமசிங்க வரவேற்றுள்ளார். இதன்போது அமைச்சர்களான டிரோன் பெர்னாண்டோ, லக்ஷ்மன் கிரியெல்ல, லால் தர்ம பிரிய

(08ஆம் பக்கம் பார்க்க)



## மட்டு- அம்பாறை சிறப்புத்தளபதி நோர்வே சிறப்புத்தூதுவருடன் சந்திப்பு

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேசுடன், நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சூல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் நேற்று சந்தித்துப் பேசியுள்ளனர்.

மட்டக்களப்பு தேனகம் விடுதியிலேயே இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதில் தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர். அத்துடன் அரசசார்பற்ற நிறுவனத்தின் இணையம் பிரதிநிதிகள் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர். இதன்போது முக்கியமாக புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்னர் சிறிலங்கா இராணுவத்தினரின் கெடுபிடிகள் இருந்து வருவது குறித்துப் புலிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன



மட்டு. அம்பாறை சிறப்புத் தளபதி எரிக்சூல்ஹெய்மை வரவேற்கிறார்.

### மிதிவண்டியில் வந்தோரால்

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் மட்டு. நகரில் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு நகரில் நேற்று பிற்பகல் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ரதீஸ் எனப்படும் அரசரத்தினம் ரதீஸ்கரன் என்பவரே சுட்டுக்கொல்லப் பட்டவராவார். முனை வீதியிலுள்ள தனியார் பேருந்து நிலைய வாகன தரிப்பிடத்தில் மக்கள் நடமாட்டம் மிக்கப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் வந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரை மிதிவண்டியில் வந்த இருவர் வழி மறித்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக அறிவிக்கப்படுகின்றது.

## சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பூரண ஒத்துழைப்புப் பெற முயல்கிறோம்

### அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சியில் இந்தியாவின் பூரண ஒத்துழைப்பினை பெறுவதிலேயே அரசாங்கம் அதிக அக்கறை காட்டி வருவதாக சிறிலங்கா அரச தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைவரும் அமைச்சருமான ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். இதன் ஒரு கட்டமாகவே இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹா எதிர்வரும் 28ஆம் திகதி சிறிலங்கா வருகை தரவுள்ளார் எனவும்;

பலாலி விமானப் படைத்தளத்தின் ஓடுபாதையைப் புனரமைக்க 300 மில்லியன் ரூபாய்களை இந்தியா வழங்கவுள்ளது எனவும் அவர் கூறினார். வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நோக்கான செய்தியாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக சபை கட்டமைப்புக் குறித்து எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை விடுதலைப் புலிகள் பிரான்ஸ் தலைநகரான பாரிஸில் கூடி ஆராயவுள்ளனர். இது குறித்து பிரான்ஸ் அரசாங்கம் சிறிலங்கா அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறது என்றும் அவர் கூறினார்.

## திருமலை செல்வநாயகபுரத்தில் இரு முஸ்லிம்கள் கொலை

### மூதூரில் நேற்று ஹர்த்தால்

திருகோணமலை செல்வநாயகபுரம் பகுதியில் நேற்று முன்தினமிரவு இரு முஸ்லிம்கள் இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

மூதூரைச் சேர்ந்தவர்களான அக்பர் குத்தூஸ் கலீம் (வயது-35), இவர் துறைமுக அதிகார சபையில் பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியவர். முகமட் நிஸ்வான் (வயது-27) இவர் திருமலை இயந்திரப் படகுச் சேவையில் பணிபுரிந்தவர். மேற்படி இருவருமே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர். மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோதே இவர்கள் மீது துப்பாக்கிப்

(08ஆம் பக்கம் பார்க்க)

### மனித உரிமைகள் பேணப்படவில்லை

## யாழ். நிலை குறித்து அமைப்புக்கள் நோர்வே அதிகாரிகளுக்கு விளக்கம்

யாழ். இல் மனித உரிமைகள் பேணப்படவில்லை என நோர்வேயைச் சேர்ந்த மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரிகளுக்கு, அங்குள்ள பொது அமைப்புகள் எடுத்துக் கூறியுள்ளன.

நோர்வேயைச் சேர்ந்த மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரி ஜில்பேனாட் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

இவர்கள் இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாணத் திற்கான இணைப்பதிகாரி ரூபான் சந்திரசேகரனையும், மனித நேய அமைப்புக்களின் தலைவர் பரமநாதன் மற்றும் நிகிக்கும், சமாதானத் திற்குமான ஆணைக்குழுவின் தலைவர் வனமீதா. பேணட் மற்றும் கியூடெக் திட்டத்தின் பணிப்பாளர் வணபிதா ஜெயக்குமார் ஆகியோ

(08ஆம் பக்கம் பார்க்க)

## வை.கோ.வை விடுதலை செய்யக்கோரி 301 பாராளுமன்ற உறுப்பினர்கள் மனு

பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலர் வை.கோ. மற்றும் அந்தக் கட்சியைச் சேர்ந்த எட்டுப் பேரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என 301 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்ட கோரிக்கை மனுவை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பொடோ மறு ஆய்வுக் குழுவினரிடம் கையளித்துள்ளனர்.

மேலும் வை. கோ. உட்பட ஒன்பது பேர் கைது செய்யப்பட்டது சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும் எனவும் அறிவிக்குமாறும் அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது ம.தி.மு.க. அவைத் தலைவர் எல். கணேசன் தலைமையிலான குழுவினர் பொடோ மறு ஆய்வுக் குழுவின் தலைமை நீதிபதி அருண் சகாரியிடம் நேற்று இந்த மனுவைக் கையளித்தனர்.

தமிழ் நாட்டில் பொடோ சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தி மாநில அரசு வை.கோ. உட்பட பலரையும் கைது செய்துள்ளது என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தச் சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்ததை தவறாகக் கருதி உடனடியாக அவரை விடுதலை செய்ய வேண்டும் எனவும் மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

(08ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்


**அறிவுடமை கல்வி நிலையம்**
**கிளிநொச்சி நகர்**
**(LOGIC)**

**A/L DAY CLASS**

ஆசிரியர்: S. யோகராஜன்
ஆரம்பம்:-20-08-2003புதன் மு.ப.10 மணி(கடந்த ஆண்டு போன்று அனுமதிகள் மட்டுப்படுத்தப்படும்) நிர்வாகி. (3624)

**உயர் கல்விநிலையம்**
(டிப்போ வீதி கிளிநொச்சி)
A/L DAY 2004 ஆகியவற்றிற்கான துரித மீட்டலும், வினாவிடையும் ஆரம்பம்16-08-2003 பி.ப 4.00 மணி. தமிழ்: **S.S.** மோகன், கணக்கீடு: **S.** நிசா (ஏனைய பாடங்கள் இவ்வாண்டு முன்னணிப் பெறுபேற்றுக்கு வழிவகுத்த உங்கள் ஆசிரியர்கள்) (3641)

**காணி விற்பனைக்கு**
கல்மடுநகர்- தருமபுரம் பிரதான பஸ் வீதியில் தென்னந்தோட்டத்துடன் அமைந்த வயற் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு-கே.ரீ.சீ.பிரசவ விடுதி முன்பாக, கிளிநொச்சி.(3643)

**விற்பனைக்குண்டு**
தரமான புழுக்கொடியல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு நிறுவனங்களின் பேரிணையம் (வெண்புறா நிறுவனத்திற்கு முன்பாக) கண்டிவீதி, கிளிநொச்சி. (சி-8456)

**தவறிவிட்டது**
வேலாயுதம் செல்வராசா என்பவரது தேசிய அடையாள அட்டை கிளிநொச்சி மாவட்டத்தில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (3642)


# பொதுசன மாதாந்த உதவிப்பணக் கொடுப்பனவு

கண்டாவளைப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான ஆனி, ஆடி மாதங்களுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் பின்வரும் திகதிகளில் வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் பி.கா மத்தியாஸ் அறிவித்துள்ளார். வரும் 21ஆம் திகதி காலை 9.00-4.00 மணி வரை தருமபுரம்கிழக்கு/மேற்கு பகுதிகளுக்கு தருமபுரம் கிழக்கு கிராம சேவகர் அலுவலகத்திலும், 22ஆம் திகதி காலை 9.00-12.00 வரை பிரமந்தனாறு பகுதிக் கிராமசேவகர் அலுவலகத்திலும். பி.ப1.00-4.00 மணி வரை புன்னைநீராவிப் பகுதி கிராம சேவகர் அலுவலகத்திலும், 25ஆம் திகதி காலை9.00-11.00 வரை குமரபுரம், உமையாள்புரம் பகுதிகளுக்கு பரந்தன் கிராம சேவகர் அலுவலகத்திலும். அதே தினம் பி.ப 1.00-4.00 வரை ஊரியான், கோரக்கன்கட்டு, முரசுமோட்டைப் பகுதி மக்களுக்கு கோரக்கன் கட்டு கிராமசேவகர் அலுவலகத்திலும் 26 ஆம் திகதி காலை 9.00-11.00வரை கல்மடு நகர்ப் பகுதிக் கிராமசேவகர் அலுவலகத்திலும், நண்பகல் 12.00-2.00 மணிவரை பெரியகுளம் பகுதிக்கு அப்பகுதி கிராமசேவகர் அலுவலத்திலும், பி.ப 2.30-4.00 மணிவரை புளியம்பொக்கணை பகுதிக்கு அப்பகுதி கிராமசேவகர் அலுவலகத்திலும் 27ஆம் திகதி காலை9.00-4.00 மணிவரை கண்டாவளை கிராம மக்களுக்கும், ஏனைய பிரிவுகளில் தவறவிட்பட்டோருக்கு கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனையிலும் உதவிப் பணம் வழங்கப்படும். (14)


**களரக வாகன ஓட்டுனர் பயிற்சியும் சாரதி அனுமதிப்பத்திரமும்**

**SELVA LEARNERS**
KILINOCHCHI

செல்வா சாரதிப்பயிற்சி நிறுவனம், எஸ்.எல்.எஸ்., கிளிநொச்சி.

(சி-8455)


# அறிவித்தல்

## நிக்கொட் திட்டம் முல்லைத்தீவு அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமான கூட்டம் 16.08.2003(சனிக்கிழமை)

முல்லைத்தீவு 'நிக்கொட்' திட்டத்தின் கீழ் அபிவிருத்தி வேலைகள் சம்பந்தமாக நடைபெற இருந்து ஒத்திவைக்கப்பட்ட கூட்டம் முன்னரே திட்டமிட்டபடி 16.08.2003 சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு திணைக்களத் தலைவர்களுடனான சந்திப்பும், மு.ப 11.30 மணிக்கு ஒப்பந்தக்காரர்களுடனான சந்திப்பும் நடைபெறுமென இத்தால் அறியத் தருகின்றேன். இக்கூட்டத்திற்கு நிக்கொட் திட்டப்பணிப்பாளர் திரு.ரி. லங்காநேசன் அவர்களும் கலந்துகொள்ள இருக்கின்றார். எனவே சம்பந்தப்பட்ட பிரதேச திணைக்களத் தலைவர்களையும் பிரதேச செயலாளர்களையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். அத்துடன் தற்பொழுது 'நிகொட்' வேலைகள் செய்யும் ஒப்பந்தக்காரர்களும் ஏனைய **ICTAD** ல் பதிவு செய்த புதிய ஒப்பந்தக்காரர்களையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

கச்சேரி
முல்லைத்தீவு
(சி.7774)

திருமதி இமெல்டா சுகுமார்
அரசாங்க அதிபரும்,மாவட்ட செயலாளரும்,
முல்லைத்தீவு மாவட்டம்.

# துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலைப் பணியாளர்

திரு.பி.குலராசா அவர்களின் தந்தையார்

## திரு. வே. பிள்ளையான்

அவர்கள் 08-08-2003 அன்று இயற்கையெய்தியமையினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.*
கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி,
கிளிநொச்சி.

(சி-8460)

# பனங்காமம் பற்றுப்பல நோக்குகூட்டுறவுச் சங்கம்,வவுனிக்குளம்

# பதவி வெற்றிடம்

பனங்காமம் பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பதவிகளுக்கான வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. எனவே தகுதியுடையவர்கள் 29.08.2003ஆம் திகதிக்கு முன்னராக எமக்குக் கிடைக்கக் கூடியதாக தலைவர், பனங்காமம்பற்று பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வவுனிக்குளம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

**01. 106: 08 வர்த்தகமுகாமையாளர் (தற்காலிகம்)**

சம்பளஅளவுத்திட்டம் – 3450 – 100 X10
120 X10 – 5650

தகைமை: அ) கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமைமட்ட பதவியில் அல்லது அதனுடன் தொடர்புடைய மேற்பார்வை பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.அல்லது மேற்சொல்லப்பட்டவாறு 10ஆவது சம்பளத்திட்டத்தில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் பொருட்களினது ஏற்றுமதி இறக்குமதி அல்லது முகாமைமட்டப் பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவமுடைய ஒரு பல்கலைக்கழக பட்டதாரி அல்லது அதற்குச் சமனான தராதரத்தையுடைய பட்டம் ஒன்றைப் பெற்றவர்.

அல்லது

இ) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக, கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் பொருட்களினது ஏற்றுமதி இறக்குமதிப் பொருள் வழங்கல் விநியோகம் /வெளிக்கள சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் ஒன்றில் அல்லது மேற்பட்ட பகுதியில் முகாமைமட்ட பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உடைய கூட்டுறவுப் பணியாளர் தராதர (உ/த) பத்திரத்தில் சித்தி/அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் குறைந்தது 03 பாடங்களில் சித்திபெற்றவர்.

**02. 301: 11 கணக்குப் பதிவாளர் (தற்காலிகம்)**

சம்பள அளவுத்திட்டம் :– 2950 – 75 X10
10 X10 – 4700

தகைமை: அ) கூட்டுறவுப் பணியாளரின் 12வது சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவாளர் /இலிகிதர் தரத்தில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 13வது சம்பளத்திட்டத்தில் இலிகிதர் பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சிய நிறுவனத்தின் இடைநிலைக் கணக்குப் பதிவாளர்பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக /கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குப் பதிவாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதர(உ/த) பத்திரம் க.பொ.த. (உ/த) பத்திரத்தில் கணக்கியல் உட்பட குறைந்தது 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்குப் பதிவாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**03) 305: 13 தட்டெழுத்தாளர் (தற்காலிகம்)**

சம்பள அளவுத் திட்டம் 2800 – 65 X10
80 X10 – 4250

தகைமை: கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் தமிழ் தட்டெழுத்தாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்துடன் க. பொ.த. (சா/த) தரப் பரீட்சையில் தமிழ் உட்பட 06 பாடங்களில் சித்தியுடன் ஆகக் குறைந்தது ஒரு நிமிடத்தில் 20 தமிழ் சொற்கள் அல்லது 30 ஆங்கில சொற்கள் தட்டெழுத்துச் செய்யும் வேகம் இருத்தல் வேண்டும்.

**04) 312: 13 சாரதி (தற்காலிகம்)**

சம்பள அளவுத் திட்டம் 2800 – 65 X10
80 X10 – 4250

தகைமை: 8ஆம் வகுப்பு சித்தியுடன் பஸ், லொறி ஆகியவற்றின் கனிஷ்டலான சாரதி அனுமதிப்பத்திரத்துடன் 04 வருட அனுபவமும் இருத்தல் வேண்டும்.

**05) 314: 16 லொறிச் சுத்திகரிப்பாளர் (தற்காலிகம்)**

சம்பள அளவுத் திட்டம் 2650 – 50 X10
60 X10 – 3750

தகைமை: அ) கூட்டுறவுப் பணியாளரின் 17ஆவது சம்பளத் திட்ட 01 வருடத்துக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ) 8ஆம் வகுப்பு சித்தியுடன் நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.

**06) 208: 12 கிளை முகாமையாளர் (நிரந்தரம்)**

சம்பள அளவுத் திட்டம் 2850 – 70 X10
90 X10 – 4450

தகைமை: அ) கூட்டுறவுப் பணியாளரின் 13ஆவது சம்பளத் திட்டத்தில் களஞ்சியப் பொறுப்பாளர் / சில்லறை களஞ்சிய மேற்பார்வையாளர் / சில்லறைக் களஞ்சிய முகாமையாளர் பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் தராதர (உ/த) பத்திரம் / க. பொ.த. (உ/த) பத்திரப் பரீட்சையில் 03 பாடங்கள் சித்தியுடன் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக ஸ்தாபனத்தில் களஞ்சிய முகாமையாளராக இருந்து ஆகக் குறைந்த 01 வருட கால அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் தராதர (சா/த) பத்திரம் சித்தி / க.பொ.த. (சா/த) பத்திர பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 04 பாடங்களிலான திறமைச் சித்தியுடன் 06 பாடங்களிலான சித்தியுடன் சில்லறைக் களஞ்சியம் அல்லது அத்துடன் தொடர்புடைய பகுதி நிர்வாகத்தில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**07) 208: 13 கிளை முகாமையாளர் (தற்காலிகம்)**

சம்பள அளவுத் திட்டம் : 2800 – 65 X10
80 X10-4250

தகைமை அ) கூட்டுறவுப் பணியாளரின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புடைய பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத் திட்டத்தில் தொடர்புடைய பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப்பணியாளர் தராதர (சா/த) பத்திரம் /க.பொ.த. (சா/த) பத்திரத்தில் கணிதம், தமிழ் உட்பட 04 பாடங்களிலான திறமைச் சித்தியுடன் கூடிய 06 பாடங்களிலான சித்தியுடன் சம்பந்தப்பட்ட பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**தலைவர்,**
பனங்காமம் பற்று ப.நோ.கூ. சங்கம்,
வவுனிக்குளம்.

(சி-8459)

# நாட்டின் அடுத்த சனாதிபதியாக பிரதமர் ரணிலே தெரிவாவார்

## எஸ்.பி.திசாநாயக்க

இந்த நாட்டின் அடுத்த சனாதிபதி தற்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே. எதிர்வரும் சனாதிபதி தேர்தலில் அவர் ஐ.தே.முன்னணியின் வேட்பாளராகப் போட்டியிட்டு அமோக வெற்றிபெறுவார். இதனை யாரும் மறுக்க இயலாது என அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார். பொ.ஐ.முன்னணியில் யாரை சனாதிபதி வேட்பாளராக நியமிப்பது என்பதில் இழுபறிநிலை தோன்றியுள்ளது என்றும் கூறியுள்ளார்.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குறித்து அமைச்சரவையில் ஆராய்வு

(கொழும்பு)

இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்றிறன் குறித்து அமைச்சரவை விசேட கவனம் செலுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளதாகவும், ஆணைக்குழுவின் பதவி வெற்றிடங்களை விரைவில் நிரப்பவேண்டுமென யோசனை கூறப்பட்டதாகவும் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆணைக்குழுவிற்குத் தேவையான பொலிஸ் பற்றாக்குறை பற்றி சனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். ஆனால், இவ்விடயம் தனக்கு அறிவிக்கப்படவில்லையென உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க பதிலளித்துள்ளார்.

# இன்றைய இந்திய சுதந்திரதின நிகழ்வில் பிரதமர்,தலைவர்களைக் கொல்லச் சதி!

## இந்திய அரசாங்கம் அறிவிப்பு

**இன்று இந்தியாவில் சுதந்திரதின கொண்டாட்டத்தின்போது பிரதமர் உள்ளிட்ட தலைவர்களை படுகொலை செய்ய தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளதாக ,கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது. இதனையடுத்து விழா நடைபெறும்வேளை டில்லியில் விமானங்கள் பறக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் 56 ஆவது சுதந்திரதினம் இன்று என்பது குறிப்பிடத்தக்கது.**

இதேவேளை ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர். 50பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரிலும் எல்லையிலும் சண்டை நிறுத்தம் அமுல்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கேட்டுக்கொண்ட மூன்றாம் நாளே இந்தச் சம்பவம் நடந்துள்ளதாக இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

அத்துடன் பாகிஸ்தான் ஆதரவு, தீவிரவாதிகளே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

வடக்குக் காஷ்மீரிலுள்ள பாரமுள்ள மாவட்டத்தில் நேற்று முன்தினம் சக்திவாய்ந்த சைக்கிள் குண்டு வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். சுமார் 40 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேபோல், அனாதமாவு மாவட்டத்தில் கைமுக்குன் பகுதியில் தீவிரவாதிகள் காவல் நிலையம் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.இதில் ஒருவர் கொல்லப்பட்டார். 10 பேர் காயமடைந்துள்ளனர்.

# அதிகாரமுள்ள மாநிலமாக டில்லியை மாற்ற ஒப்புதல்

இந்தியத்தலைநகர் டில்லியை முழு அதிகாரமுடைய மாநிலமாக மாற்றுவதற்கு இந்திய மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. பிரதமர் வாஜ்பாய் தலைமையில் புதுடில்லியில் திங்களன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது என்று பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் சுஸ்மாங்சுவராஜ் கூறியுள்ளார்.

மத்திய அரசின் நேரடி நிர்வாகத்துக்கு உட்பட்ட பிரதேசமாக இதுவரை டில்லி இருந்து வரும் நிலையில் அதனைத் தனியான மாநிலமாக மாற்றுவதற்கு முயற்சிகள்மேற்கொள்ளப்பட்டு, அதற்கான சட்ட மசோதா இந்த ஆண்டுக்கான மழைக்கால கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்பட இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

# இந்தியாவுடன் நட்புறவு பாராட்டவே பாக். மக்கள் விரும்புகின்றனர்

## இஸ்லாமாபாத் சென்ற இந்தியக் குழு தெரிவிப்பு

இந்தியாவுடன் நட்புப் பாராட்டவே பாகிஸ்தான் மக்கள் விருப்பம் கொண்டுள்ளனர் என இஸ்லாமாபாத் சென்று திரும்பியுள்ள நாடாளுமன்றக்குழு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் சென்ற நாடாளுமன்றக் குழு நேற்று முன்தினம் இந்தியா திரும்பியுள்ளது.

இந்தியாவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் அடங்கிய 60 பேர் கடந்த சனிக்கிழமை பாகிஸ்தான் சென்றிருந்தனர். அங்கு பாகிஸ்தான் சனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்களை இக்குழு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது.

பின்னர் இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் இந்தியா திரும்பியுள்ளனர்.நடந்த சம்பவங்களை மறந்து இரு நாடுகளும் நட்புப் பாராட்ட வேண்டும் என்று அந்நாட்டு மக்கள் விரும்புவதாகவும் அக்குழுவினர் கூறியுள்ளனர்.

இதேவேளை, பாகிஸ்தானுடன் மீண்டும்விமானப் போக்குவரத்தைத் தொடங்குவது குறித்து அந்நாட்டு தொழில் நுட்பக் குழுவுடன் விவாதிக்க இருப்பதாக இந்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜிப் பிரதாப் ரூடி தெரிவித்துள்ளார். இக் குழுவினர் அடுத்தமாதம் மூன்றாம் திகதி வரவிருப்பதாகக் கூறிய ரூடி, இவ்விடயத்தில் பிரதமர்தான் இறுதி முடிவு எடுப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

# ஆறு தரப்பு பேச்சுக்கள் சீனத்தலைநகரில் நடைபெறும்

## வடகொரிய அணுஆயுத நெருக்கடி

வடகொரியாவின் அணுவாயுத நெருக்கடிகள் பற்றிய ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கான திகதிகள் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக வடகொரியாவின் வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் ஆகஸ்ட் 27ஆம்திகதி முதல் 29 ஆம் திகதி வரை சீனத் தலைநகரா பீஜிங்கில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தலை சீன அரசு வெளியிடுமென தென்கொரிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இவரின் தென்கொரிய விஜயத்தின் போது இவ்வறிக்கை வெளியிடப்படவுள்ளமை [illegible]க்கது.

# கைதான பாகிஸ்தா[illegible]ருக்கு தலா 50 ஆயிரம் தண்டம்

## தங்கால நீதிமன்றில் தீர்ப்பு

சட்ட விரோதமாக இத்தாலிக்குச் செல்வதற்காக இலங்கையில் தங்கியிருந்த வேளை கைது செய்யப்பட்ட பாகிஸ்தானியர் 265 பேருக்குத் தங்கால நீதவான் தலா ஐம்பதாயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளார்.

சட்ட விரோதமாக வெளிநாடு செல்வதற்குத் தங்கியிருந்த சமயம் கைதுசெய்யப்பட்ட இவர்கள் தமது குற்றத்தை நீதிமன்றில் நேற்று ஒப்புக்கொண்டுள்ளனர்.

இதனை அடுத்து தலா ஐம்பதாயிரம் தண்டப்பணம் விதித்த நீதவான் தண்டப்பணம் செலுத்தியதும் அனைவரையும் விடுதலை செய்யுமாறு உத்தரவிட்டார்.

தண்டப்பணம் செலுத்தத் தவறுவோர் இரண்டு மாத காலம் சிறையில் விளக்க மறியலை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானில் பேருந்தில் குண்டுவெடிப்பு 6 குழந்தைகள் உட்பட 15 பேர் பலி!

ஆப்கானிஸ்தான் நாட்டில் பேருந்து ஒன்றில்நேற்றுமுன்தினம் தலிபான் தீவிரவாதிகள் வைத்ததாக அறிவிக்கப்படும் வெடிகுண்டு வெடித்ததில் 06 குழந்தைகள் உட்பட 15 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளார்கள். ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சி ஒழிக்கப்பட்டபோதும் அந்த அமைப்பின் உறுப்பினர்கள் தொடர்ந்தும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், அந்நாட்டின் தெற்குப்பகுதியில் சென்று கொண்டிருந்த பேருந்து ஒன்றில் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடிகுண்டு வெடித்தது.

இதில் 06 குழந்தைகள் 01 பெண் உட்பட 15 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். அந்தப் பேருந்து சிதைந்து சின்னாபின்னமாகியுள்ளது.

இது குறித்து தகவல் கிடைத்ததும் காவல்துறை உயரதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அடுத்த வாரம் அந்நாட்டின் சுதந்திர தினம் கொண்டாடப்படவுள்ள நிலையில் இச்சம்பவம் அங்கு பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

# லைபீரியாவில் குழப்பநிலை பொருட்களைச் சூறையாடும் மக்கள்

லைபீரியாவில் ஏற்பட்டுள்ள பொருளாதார சீர்கேடு காரணமாக பசி, பட்டினியால் மக்கள் தவித்து வருவதால், தாங்களுக்கு வேண்டிய பொருட்களைச் சூறையாடத்தொடங்கியுள்ளனர்.லைபீரியாவின் முன்னாள் சனாதிபதியாசார்ஸ் ரெய்லர் பதவி விலகியுள்ள நிலையில்,அங்குநைஜீரிய அமைதிப்படையினர் அமைதியை ஏற்படுத்துவதில் முனைந்துள்ளனர். இந்நிலையில் உள்நாட்டுப்போரால அங்குஏற்பட்ட பொருளாதார சீர்கேடு காரணமாகதற்போது அங்கு பஞ்சம் நிலவுகின்றது.

இதனால்உணவின்றித் தவித்து வரும்மக்கள்தங்களுக்கு வேண்டிய பொருட்களைக் களவாடத் தொடங்கியுள்ளனர். தலைநகர் மொன்ரோவியாவில் பட்டினியால் வாடும் மக்களுக்கு வழங்குவதற்காக உணவுப்பொருட்களை மேற்காபிரிக்க அமைதிப்படையினர் ஒரு கிடங்கில் பாதுகாத்து வந்தனர்.ஆனால் அதனை விநியோகம் செய்யும் முன், அம்மக்கள் பொறுக்காது அந்தக் கிடங்கிற்குவந்து உணவுப் பொருட்களைச் சூறையாடிச் சென்றுள்ளனர். இதனால் அங்குபெரும்பதற்றம்ஏற்பட்டுள்ளது.

# விமானசேவை இரத்தானது

தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாகப் பாதுகாப்புக் கருதி சவூதி அரேபியாவுக்கான தனது நாட்டுப் பயணிகள் விமானத்தை பிரிட்டன் ரத்துச் செய்துள்ளது.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் அமெரிக்காவுடன் இணைந்து பிரிட்டனும் தீவிரமாகப் போராடி வருவதால், அந்நாட்டிற்குத் தீவிரவாதிகளிடமிருந்து அடிக்கடி மிரட்டல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

அந்நாட்டு விமானங்கள் குறிவைத்துத் தாக்கப் போவதாக சவூதி அரேபியத் தீவிரவாதிகளிடமிருந்து அண்மையில் மிரட்டல் வந்துள்ளது.

# நியூசிலாந்துப் போட்டிக்கு இந். கிரிக்கெட் அணி தயாராகிறது

நியூசிலாந்துக்கு எதிரான போட்டிகளில் பங்கேற்கும் இந்திய கிரிக்கெட்வீரர்களுக்குப் பெங்களூரில் நேற்று பயிற்சி முகாம் தொடங்கியுள்ளது.

நியூசிலாந்துக்கு எதிராக விளையாடவுள்ள தற்காலிக வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி முகாம் பெங்களூரில் நேற்றுத் தொடங்கியது.

வரும் அக்டோபர் மாதம்இந்தியா வரும் நியூசிலாந்து அணி, இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இதற்கென 36 வீரர்கள் இந்திய அணிக்குத் தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பெங்களூரில் நேற்று முதல் பயிற்சி முகாம் தொடங்கப்பட்டுள்ளது.

வரும் 26 ஆம் திகதிவரை தொடர்ந்து பயிற்சி முகாம் 13 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இந்த பயிற்சி முகாமில் வீரர்களுக்கு உடற்தகுதி தொடர்பான பயிற்சிகள் மட்டுமே அளிக்கப்படவுள்ளன.காலை, மாலை இரு நேரமும் வீரர்கள் பயிற்சியில் ஈடுபடுவார்கள் என தேர்வுக்குழுத் தலைவர் பிரிஜிஸ் பட்டேல் கூறியுள்ளார்.இந்தப் பயிற்சிகளை அணியின் பயிற்சியாளர் ஜான் ரைட், உடற் பயிற்சியாளர் அலன் ஹிம், மருத்துவம் அன்ரோ லீபஸ் ஆகியோர் கண்காணிக்கவுள்ளனர்.

### புலிகளுக்கும், தனக்கும்

# வேறுபட்ட ஆவணங்கள் அனுப்பியதாக மீண்டும் சந்திரிகா ரணிலுக்குக் கடிதம்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தனக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இரு வேறுபட்ட



ஆவணங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக மீண்டும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார். அத்துடன் இது குறித்து சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று கடிதம் மூலம் விளக்கம் கோரியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அரசாங்கத்தின் பேச்சுவார்த்தைக் குழுவின் தலைமைப் பேச்சாளர் இதற்கு அளித்த விளக்கம் சரியான விளக்கமல்ல. இரண்டு ஆவணங் களுக்குமுள்ள வேறு பாட்டை "முற்றுப்புள்ளி", "கமா" ஆகியவை மாற்றி இடப்பட்டதுபோல காட்டி மறைத்துவிடப்பார்க்கிறார்.

கடந்த 18ஆம் திகதி எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்துடனான ஆவணம் 17ஆம் திகதி நோர்வே அனுசரணையாளர் மூலம் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பப் பட்டது போன்றதல்ல. எனவே விடுதலைப் புலிகளுக்கும் எனக்கும் வேறுபட்ட ஆவணத்தை அனுப்பியதற்கான விளக்கத்தை அளிக்குமாறு கோருகிறேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிளி.உணவகங்களில் 'லஞ்சீற்' செப்ரெம்பர் முதல் தடை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட சுற்றாடல் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மாவட்டத்தில் பொலித்தீன் பாவனையினைத் தடைசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

முதற்கட்டமாக உணவகங்களில் 'லஞ்சீற்' பாவனைகளை நிறுத்தி வாழை இலை,தாமரை இலைகளைப் பாவிப்பது சாலச்சிறந்ததென கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன்.நித்தியானந்தன் உணவகங்களில் உரிமையாளர்களுக்கு வேண்டுகை விடுத்துள்ளார்.

மாவட்ட சுற்றாடல்மாநாட்டின் தீர்மானத்திற்கு அமைவாக எதிர்வரும் 1-9-2003 முதல் கரைச்சிப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் மேற்படி 'லஞ்சீற்' பாவனை தடைசெய்யப்படுகின்றதெனவும், எனவே உரிமையாளர்கள் ஒத்துழைப்பு நல்குமாறும் வேண்டியுள்ளதுடன் வாழை,தாமரை இலைகளைப் பாவனைக்குட் படுத்தும்படியும் ஆலோசனை வழங்கியுள்ளார். (சோ)

## கூட்டம்

துணுக்காய் மல்லாவி பிரதேசத்திற்குட்பட்ட சகல உழவு இயந்திரப் பாவனையாளர்களும் வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 3.00 மணிக்கு அனிஞ் சியன்குளம் அ.த.க பாடசாலை மண்டபத்தில் உழவு இயந்திர சங்கம் அமைப்பதற்கான கூட்டம் இடம்பெற இருப்பதால் இக் கூட்டத்திற்கு தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் துணுக்காய்ப்பிரதேச அரசியல் துறை கேட்டுள்ளது.

## சுகாதார ஆய்வு

பூநகரி-பள்ளிக்குடா கிராமத்தில் கடந்த சனிக்கிழமை சாமிப்புலம் தியாகதீபம் மருத்துவ மனை மருத்துவர் தலைமையில் தமிழீழ சுகாதார சேவைப்பிரிவி னரால் சுகாதார ஆய்வு இடம்பெற்றது.

அவ் ஆய்வின் போது வீடு வீடாகச் சென்று சுகாதார விழிப்புணர்வுக் கருத்தூட்டல் இடம்பெற்றது. (34)

## பரந்தன் – முல்லை வீதியில் இன்றுமுதல் வேகக்கட்டுப்பாடு

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் முல்லைவீதியில் இன்றுமுதல் வேகக்கட்டுப்பாட்டு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தமிழீழக் காவல்துறை வீதிப்போக்குவரத்துப் பிரிவினர் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக மேற்படி பரந்தன் முல்லை வீதியில் வாகன விபத்துக்கள் இடம்பெற்று வருகின்றமையை அடுத்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளதுடன்

நாளைமுதல் பரந்தன் 2ஆம் கட்டை நவஜீவனம் முதல் தருமபுரம மஞ்சள் பாலம் (நெத்தலியாற்றுப் பாலம்) வரை வாகனங்களின் வேகத்தின் அளவு 40 கி.மீ.ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதெனவும் இக்கட்டுப்பாட்டினை மீறி வாகனங்களைச் செலுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படுமெனவும் காவல் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (சோ)

## இரணைமடு நீர்வரி இடாப்பு புதுப்பிக்க நடவடிக்கை

(கண்டாவளை)

இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள ஊரியான் முரசுமோட்டை திட்ட உபகுழுப்பகுதியின் கீழ் உள்ள நீர்ப்பாசனக்காணிகள் உரிமை மாற்றம் பெற்ற பெருமளவு விவசாயிகள் கடந்த பல வருடங்களாக அவர்களின் காணிகள் புதிய நீர்வரி இடாப்பில் சேர்க்கப் படாமையால் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடுவதற்குதண்ணீர் பங்கு இல்லாமல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி வந்தனர். இதனைக் கருத்திற் கொண்டு எதிர்வரும் 23ஆம், 24ஆம் திகதிகளில் கண்டாவளைப் பிரதேச செயலர் பணிமனையில் நீர்வரி இடாப்பு புதுப்பித்தல் வேலைகள் நடைபெறும். எனவே மேற்படி பகுதி விவசாயிகள் தமது காணிகளைப் நீர்வரி இடாப்பில் பதிவு செய்து கொள்ளுமாறு கண்டாவளைப் பிரதேச காணி உத்தியோகஸ்தர் எஸ்.நமசிவாயம் அறிவித்துள்ளார். (14)

## விபரங்கள் பார்வைக்கு

கண்டாவளைப் பிரதேசத்தில் சுய தொழில்- உதவித்திட்டத்தின் கீழ் 45 வயதிற்கு உட்பட்ட மிகவும் வறிய விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் தெரிவு செய்யப்பட்ட பெயர்விபரம் பொது மக்களின் பார்வைக்கு, கண்டாவளைப் பிரதேசசெயலர் பணிமனையில் வைக்கப்பட்டுள் ளது. அதனைப் பார்வையிட்டு தெரிவு செய்யப்பட்ட பெயர்களில் ஆட்சேபனை இருந்தால் தமது கருத்துக்களை கண்டாவளைப் பிரதேச செயலரிடம் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (14)

## மேல்மாகாண வைத்தியசாலைகளில் ஊழியர்கள் நேற்று வேலை நிறுத்தம்

மேல் மாகாணத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியத்துறையைச் சேர்ந்த அனைவரும் நேற்றுக்காலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட் டுள்ளனர்.

மகரகம புற்றுநோய் வைத்திய சாலை, ரிஜ்வே சிறுவர் வைத்திய சாலை, டி சொய்சா, காஸல் மகப் பேற்று வைத்தியசாலை ஆகியவற்றைத் தவிர ஏனைய வைத்திய சாலைகள் அனைத்திலும் கடமையாற்றுபவர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் வைத்தியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டதால் ஏற்பட்ட சம்பள முரண்பாட்டை நீக்குமாறு கோரியே இந்த வேலை நிறுத்தம் மேற்கொள்ளப்படுவதாகப் பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவர் டாக்டர் திலின குணவர்தன தெரிவித்தார்.

52 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு இன்றைய வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாகவும் இன்று காலை 6 மணி முதல் நாளைக் காலை 6 மணிவரை வேலை நிறுத்தம் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## கிளி. மகா வித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட கட்டடம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெவ் நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் புனரமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடம் ஒன்று நேற்றுத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்விற்கு மகாவித்தியாலய அதிபர் யோகநாதன் தலைமை தாங்கினார். தமிழீழத் தேசியக் கொடியை சாள்ஸ்அன்ரனி படையணியைச் சேர்ந்த காண்டீபன் ஏற்றினார். பாடசாலைக் கொடியை பாடசாலை அதிபர் வ. யோகநாதன் ஏற்றினார். மங்கல விளக்கினை சென். திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி அரியரத்தினம், பாடசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் பசுபதிப்பிள்ளை ஆகியோர் ஏற்றி வைத்தனர். தொடர்ந்து புனரமைக்கப்பட்ட மண்டபத்தை யுனிசெவ் பிரதிநிதி மைக்கல் கோப்லண்ட் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். கட்டடம் அமைக்கப்பட்டதன் நினைவுக்கல்லை பிரதிக் கல்விப் பணிப்பாளர் ம. பத்மநாதன், யுனிசெவ் பிரதிநிதி மைக்கல் கோப்லண்ட் ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.

அடுத்து உரைகளை மைக்கல் கோப்லண்ட், ம. பத்மநாதன், வன்னி மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றி உரையை பிரதி அதிபர் பங்கையற்செல்வன் நிகழ்த்தினர்.

கடந்த 1996ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றும் நோக்கில் மேற்கொண்ட சத்ஜெய இராணுவ நடவடிக்கையின்போது இப்பாடசாலை பெரும் சேதமடைந்திருந்தது. இந்நிலையில் மாணவர்கள் மரங்களின் கீழ் அமர்ந்து கல்வி கற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஆனால், இன்று மிகவும் மோசமாக சேதமடைந்திருந்த அக்கட்டடம் புனரமைக்கப்பட்டு மாணவர்களின் பாவனைக்காக திறக்கப்பட்டிருப்பதால் மாணவர்கள் கடந்த காலங்களில் அனுபவித்து வந்த துன்ப நிலை மாற்றமடைந்துள்ளது. (லோ)

### கண்டாவளைப்பிரதேசத்தில்

## அத்துமீறிப் பிடிக்கப்பட்டுள்ள அரசகாணி தொடர்பான மதிப்பீடு

கண்டாவளைப்பிரதேசத்தில் அத்துமீறிப் பிடிக்கப்பட்டுள்ளஅரசகாணிகள் தொடர்பான மதிப்பீடு பின்வரும் திகதி ஒழுங்கில் குறிப்பிடப்படும் கிராமசேவகர் பிரிவு அலுவலகங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என கண்டாவளைப் பிரதேச செயலாளர் பி.கா. மத்தியஸ்தர் அறிவித்துள்ளார்.

இன்று காலை 9.00மணி தொடக்கம் 12.00 மணி வரை ஊரியான் பகுதி, பிற்பகல் 1.00-4.00மணிவரை கோரக்கன்கட்டு, நாளை 9.00- 1.00 முரசுமோட்டைப்பகுதி, 18ம் திகதி 9.00-4.00வரைபரந்தன் பகுதி, 19ம் திகதி 9.00-4.00வரை கல்மடுநகர்ப் பகுதி,21ம்திகதி 9.00-4.00 வரை உமையாள்புரப்பகுதி, 22ம் திகதி 9.00-4.00வரை பிரமந்தனாறுப் பகுதி 25ம்திகதி 9.00-4.00வரை புளியம் பொக்கணைப்பகுதி, 26ம் திகதி9.00-4.00வரை பெரியகுளம் பகுதி, 28ம்திகதி 9.00-4.00வரை கண்டாவளைப்பகுதி, 29ம்திகதி காலை 9.00-4.00வரை புன்னைநீராவிப் பகுதி, 30ம்திகதி 9.00-4.00வரை குமரபுரம்பகுதி ஆகிய இடங்களில் நடைபெறும். பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்திசெய்தவர்கள் மட்டும் பதிவு செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1) 15.06.1995 இற்கு முன் ஆட்சி செய்தமைக்கான ஆட்சிப்பத்திரம்.
(2) அரச ஒதுக்கீடு இல்லை என்பதை உறுதிப்படுத்தல்.
(3) இடப்பெயர்வின் நிவாரணம் பெற்றுக்கொள்ளாமை.
(4) மேலதிக காணி இல்லை என்பதை உறுதிப்படுத்தல்.
(5) நிரந்தரமாகக் குடியிருந்து அபிவிருத்தி செய்தமை என்பவையாகும். (14)

### - யாழ். போதனா வைத்தியசாலை -

## பொலிஸ் விசாரணைப் பிரிவில் தமிழ் தெரியாத அதிகாரி

யாழ்.போதனா வைத்தியசாலை பொலிஸ் விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக தமிழ் தெரியாத ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கின்றமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

கடந்த நான்கு மாதகாலமாகப் பணிபுரிந்து வரும் இவ் அதிகாரியிடம் வரும் மக்களை அவர் சிங்களத்தில் தாறுமாறாக ஏசுவதாகவும் தெரியவருகிறது.

இவரிடம் செல்லும் போது வீண் அலைச்சல்களை ஏற்படுத்தக் கூடியவாறு இவர் நடந்துகொள் வதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வதிகாரியின் நடவடிக்கையினால் வைத்தியசாலை பொலிஸ் பிரிவினருக்கும் மரணவிசாரணை தொடர்பாக அங்கு செல்லும் மக்களுக்குமிடையே அடிக்கடி வாக்குவாதங்களும், சிலவேளைகளில் கடும் முறுகல் நிலையும் ஏற்படுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இப்பகுதியில் தமிழ் தெரிந்த ஒருவரை நியமிக்குமாறும் பல தடவை கோரிக்கை விடுத்தும் இதுவரைஎவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

### போர்நிறுத்த...

குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். ஒப்பந்தத்திலுள்ள இவ்விடயத்தை நடைமுறைப்படுத்த, சிறிலங்கா அரசாங்கமோ போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவோ உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை. அல்லது இடம்பெயர்ந்த மக்களின் பாரிய பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படவில்லை என மேலும் தெரிவித்தார்.

நோர்வே சமாதான சிறப்புத் தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டார். சிறிலங்கா விமானப்படை உலங்குவானூர்தி மூலம் மட்டக்களப்பு விமான நிலையத்தில் வந்திறங்கிய அவர், பின்னர் மட்டக் களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள சிறிலங்கா போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்குச் சென்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆன்ரிஜக் ரியூன் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் போர் நிறுத்த ஒப்பந்த அமுலாக்கம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் எரிக் சூல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார். மட்டக்களப்பு மாவட்டத்தில் போர் நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து நடைபெற்றுவரும் மீள் குடியேற்ற நடைமுறைகள் தொடர்பாக எரிக் சூல் ஹெய்ம் கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து காத்தான்குடிக்குச் சென்ற அவர் அங்குள்ள முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்தார்.

### திருமலை..

பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மோட்டார் சைக்கிளும் மற்றும் எண்பதாயிரம் பணமும் காணாமற்போயிருப்பதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்தைக் கண்டித்து மூதூர் நகரில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

### வை.கோ...

காங்கிரஸ், அ.தி.மு.க.வைத் தவிர 36 கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் முந்நூறு பேர் இந்த மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.

### யாழ்...

ரைச் சந்தித்துள்ளார். இவர்களிடம் யாழ்ப்பாணத்தில் தற்போது மனிதவுரிமை பேணப்படுகின்றதா? என நோர்வேக் குழு அவர்களைக் கேட்டபோது மனிதவுரிமை இங்கு பேணப்படவில்லை. ஏனெனில், அரச படையினரின் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கல்விசார்ந்த பிரச்சினைகள் என்பனவற்றை எடுத்துக் கூறியுள்ளனர். அத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இதுவரை காலமும் யாழ். மக்கள் இயல்பு வாழ்விற்குத் திரும்பவில்லையெனவும் அவர்கள் கூறியுள்ளனர். (33)

### தாய்லாந்துப்....

ஆகியோரும் சென்றுள்ளனர். விமான நிலையத்தில் தாய்லாந்துப் பிரதமருக்கு விமானப் படையினரால் விசேட அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டுள்ளது.

இக்குழுவினர் விமான நிலையத்திலிருந்து விசேட வாகனத்தில் கொழும்பு அழைத்துச் செல்லப்பட்டு பிரதமர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றினர்.

சிறிலங்காவுடனான வர்த்தக கொடுக்கல் வாங்கல் அடுத்த ஆண்டு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களால் அதிகரிக்கப்படுமென அவர் கூறினார்.இதேவேளை, இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு தாய்லாந்து வழங்கும் ஊக்கத்தைப் பிரதமர் ரணில் பாராட்டியுள்ளார். இரு நாடுகளும் அனைத்துத் துறைகளிலும் எதிர்காலத்தில் ஒன்றிணைந்து செயற்படுமென அவர் கூறியுள்ளார்.

தாய்லாந்துப் பிரதமர் உட்பட உயர் மட்டத் தூதுக்குழுவினர் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு சிறிலங்கா வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.